தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 12 மே 2012 கனி 6

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th May 2012

To

கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள் – ஏசாயா 35:10

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Tamilnadu District Preachers

BATLAGUNDU CHURCH OF CHRIST
MEETS HERE
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

Our Radio & TV Programs
SriLanka RadioSw25,41 Meter
on Saturday 5.30P.M
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

ஓரேப் - HOREB

- இது தேவனுடைய பர்வதம் என்றும் சீனாய் மலை என்றும் அழைக்கப்படுகிறது - (1இரா.19:8).
- தேவபர்வதமாகிய ஓரேப்பில் மோசேக்கு கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியில் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார் - (யாத்.3:2).
- நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே இஸ்ரவேலோடே உடன்படிக்கை பண்ணினார்.
- ஓரேப் பர்வதத்தில் கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டானது - (1இரா.19:9)
- சில வித்துவான்கள் சீனாய் மலையிலிருந்து ஓரேப் வேறுபட்டிருக்கிறது எனக் கருதுகின்றனர். சிகரம் அல்லது குன்று போன்றவை இஸ்ரவேலர் பயணம் செய்த தாழ்வான பகுதியில் ஒருவேளை இருக்கலாம் என கருதுகின்றனர்.
- இங்கே தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளை மோசே பெற்றுக் கொண்டார் - (யாத்.31:8).
- கர்த்தர் இந்த மலையிலிருந்து இஸ்ரவேலரை கானானை சுதந்தரித்துக் கொள்ளும்படி புறப்படுங்கள் என்றார் - உபா.1:6.

பெண்ணாய் பிறப்பது பெரும்பாக்கியம்...

- புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு - (நீதி.19:14).
- புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக்கட்டுகிறாள் - (நீதி.14:1).
- குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது - (நீதி.31:10).
- கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் - (நீதி.31:30).
- குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள் - (நீதி.12:4)
- நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்தாள் தபீத்தாள் - (அப்.9:36)
- தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியம் செய்த ஸ்திரீகள் - லூக்.8:3
- கெங்கிரேயா சபையில் ஊழியத்தில் அதிக ஈடுபாடுள்ள பெபேயாள் - ரோம.16:1
- பவுலுக்கு உடன் வேலையாட்களில் உதவியாயிருந்த பிரிஸ்கில்லாள் - ரோம.16:3
- கர்த்தருக்குள் பிராயசப்பட்ட திரிபோனாள், திரிபோசாள், பெர்சியாள் - ரோம.16:12
- மாயமற்ற விசுவாசத்தோடிருந்த லோவிசாள், ஜனிக்கேயாள் - 2தீமோ.1:5
- சாராளைப் [illegible] - ஆதி.17:16

...நீங்களும் ஒரு பெண்ணாயிருப்பதற்காக கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்.

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

வேத அறிவுப் போட்டி எண்: 141

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. தேவன் எப்படியிருக்கிறார்? அவரில் எவ்வளவேனும் இருள் உண்டா?
2. பாவி மனந்திரும்பாவிட்டால் அவர் எதைக் கருக்காக்குவார்?
3. மனுஷர்கள் சாவைத்தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள் சாவோ அவர்களுக்கு எப்படிப்போம்?
4. மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? இதை எந்த புத்தகத்தில் படிக்கிறோம்?
5. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு என்னவாகும்?
6. கண் சாடை காட்டுகிறவன் என்ன உண்டாக்குகிறான்?
7. இயேசுவை சிலுவையில் அறைந்தபோது எந்தமணி வேளையாயிருந்தது?
8. ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு எது உண்டாகும்?
9. பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டவன் யார்?
10. ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள்போலவும் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட எதுபோலவும் இருக்கிறது?



உண்மையுள்ள மனுஷன்...



- உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் - நீதி.28:20
- கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான் - லூக்.16:10
- மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல - எபி.3:2
- கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை (பவுல்) உண்மையுள்ளவனென்றெண்ணி - 1தீமோ.1:12
- உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய ஒநேசிமு - கொலோ.4:9
- உண்மையுள்ள ஊழியக்காரனும் கர்த்தருக்குள் எனக்கு உடன்வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு - கொலோ.4:7
- உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம் - நீதி.12:22
- அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள் - சகரி.8:16
- உண்மையாய் நடந்த எசேக்கியா கர்த்தரை நோக்கி: - ஏசா.38:3

சிறுவர் பகுதி

அரண்மனை உப்புத்தின்று ஆண்டவருக்கு விரோதமானவர்கள்

வேத பகுதி: எஸ்றா 4:1–24

பாபிலோனிலே நேபுகாத்நேச்சார் என்ற ஒரு ராஜா தேவஜனங்களை சிறைபிடித்தான். வெகுநாட்கள் சிறைவாசிகளாக இருந்த பின்பு விடுவிக்கப்பட்டார்கள். சிறையிலிருந்து வீடு திரும்பின தேவஜனங்களாகிய யூதர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியுமா? இடிக்கப்பட்ட தங்களுடைய தேவனுடைய ஆலயத்தையும் பட்டணத்தின் அலங்கங்களையும் கட்ட ஆரம்பித்தனர். அப்பொழுது நதிக்கு அப்புறத்தில் உள்ள தேவனை அறியாத புறஜாதி மக்களும் வந்து நாங்களும் உங்களோடு சேர்ந்து கட்ட வருகிறோம் என்றார்கள். அதற்கு யூதர்கள், தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்கள். அதினால் அந்த தேசத்து ஜனங்கள் யூதர்களுக்கு விரோதமாக எழும்பி ஆலயத்தைக் கட்ட தடை செய்ய கோரி அர்தசஷ்டா என்ற ராஜாவுக்கு கடிதம் எழுதி அனுப்பினார்கள்.

என்ன எழுதினார்கள் தெரியுமா? நதிக்கு இப்புறத்தில் இருக்கிற உமது அடியார் முதலானவர்கள் அறிவிக்கிறது என்னவென்றால், உம்மிடத்திலிருந்து எங்களிடத்திற்கு வந்த யூதர் எருசலேமிலே கூடி கலகமும் பொல்லாப்புமான அந்தப் பட்டணத்திற்கு அஸ்திபாரம் போட்டு, அதின் மதில்களை எழுப்பிக்கட்டுகிறார்கள் என்று ராஜாவுக்கு தெரியவருவதாக, இப்பொழுதும் இந்தப் பட்டணம் கட்டப்பட்டு, அலங்கங்கள் எழுப்பிக்கப்பட்டுத்தீர்ந்தால், அவர்கள் பகுதியையும் தீர்வையையும் கொடுக்கமாட்டார்கள் அதினால் ராஜாக்களின் வருமானத்திற்கு நஷ்டம் வரும் என்று தெரியவருவதாக. இப்பொழுதும் நாங்கள் அரண்மனை உப்புத்தின்கிறபடியால் ராஜாவிற்கு இதைத் தெரியப்படுத்துகிறோம் என்றார்கள். இதை வாசித்த ராஜா தீர்க்க விசாரிக்காமல் உடனே அந்தப் பட்டணத்தை கட்டாமல் நிறுத்திவிடும்படி கட்டளையிடுங்கள் என்று எழுதி அனுப்பினான். அந்த நகலை அந்த ஜனங்கள் எடுத்துக்கொண்டு தீவிரமாக சென்று எருசலேமிலே கட்டடவேலை செய்து கொண்டிருந்த தேவஜனங்களை பலவந்தத்தோடும் கட்டாயத்தோடும் வேலை செய்யாதபடிக்கு நிறுத்திப்போட்டார்கள்.

பார்த்தீர்களா! ஆண்டவருடைய ஆலயத்தை கட்ட வருகிறோம் என்றவர்களே ஆலயத்தை கட்ட தடையாக மாறினார்கள். காரணம் தங்களை கட்ட அனுமதிக்காததே. அதைப்போல இன்றும் சபைகளில் தேவனை நன்கு அறியாதவர்கள் உள்ளே புகுந்து நாங்களும் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம் என்று பிரசங்கபீடம் வரை ஏறி வசனத்தால் குத்தப்பட்டு மனந்திரும்பாமல் அப்பீடத்திற்கே துரோகிகளாக மாறி ஊரெல்லாம் சென்று சபையைப்பற்றி தூற்றுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

மனப்பாட வசனம்:
"சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப்பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்" சங்கீதம் 129:5

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 12 மே - 2012 கனி - 6

ஆசிரியருரை

என் நாமத்தினிமித்தம்
For My Name`s Sake



ஆண்டவர் இயேசுவின் நாமத்தினிமித்தம் வரக்கூடிய பாடுகளையும் உபத்திரவங்களையும் தம்முடைய சீஷர்களுக்கு போதித்தார். அவரை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் இவ்விதமான பாடுகள் உண்டு. ஆண்டவர் ஒருவரையும் ஏமாற்றி அழைக்கவில்லை. என்னைப் பின்பற்றி வந்தால் அவனுக்கு பாடுகள் இருக்காது என்று சொல்லவுமில்லை. "என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" என்றார் (லூக்.21:17). இயேசுவை ஏற்றுக்கொண்டவுடன் ஏற்றுக்கொள்ளாத ஜனங்கள் நம்மை பகைப்பார்கள். நாம் உண்மையாக நடக்க முயற்சிக்கும்போது அது சிலருக்குப்பிடிக்காது. ஒருவேளை அது அவர்களுக்கு இடையூறாக இருக்கும். இப்படி பல காரியங்களினிமித்தம் உலகம் நம்மை பகைக்க ஆரம்பிக்கிறது. அப்போஸ்தலர்களை இயேசுவினிமித்தம் பிடித்து துன்பப்படுத்த ஆரம்பித்தனர்.

"அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப்.5:41,42). அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்தினிமித்தம் அவமானமடையும்போது அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள். சிலர் சின்ன அவமானத்தைக்கூட தாங்கிக்கொள்ள முடியாமல், கர்த்தர் என்னை இவ்விதமான அவமானத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டாரே என்று மனம் நொந்து பின்மாற்றமடைகின்றனர். பின்பு சபை கூடுகைக்கும் ஆராதனைகளுக்கும் செல்லாமல் வாழ்க்கையை வீணாக்கிப்போடுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு

விரோதமாக இருந்தவன். அவனை கர்த்தர் சந்தித்து தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும் பாத்திரமாக தெரிந்துகொண்டார். இப்படி தெரிந்துகொண்ட அவனை வேதனைப்படாது அவர் பாதுகாத்துக்கொள்ளவில்லை. அனனியா மூலம் கர்த்தர்பேசும்போது; ''அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்'' (அப்.9:16). அப்போஸ்தலர்களிலே அதிகமான பாடுகளை அநுபவித்தவர் அப்போஸ்தலனாகிய பவுலாகத்தானிருக்கமுடியும். அவ்வளவு பாடுகளை கர்த்தர் நிமித்தம் அநுபவித்தார். ''யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன். மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்'' என்றெல்லாம் சொல்லுகிறதை நாம் கொரிந்தியர் புத்தகத்தில் வாசிக்கிறோம். தேவனுடைய ஜனங்களே முதலாவது பவுலுக்கு விரோதிகளாக மாறினார்கள். எப்படி இயேசுவை கொலைசெய்வதற்கு யூதர்களே காரணமாக இருந்தார்களோ அதைப்போல பவுலுக்கும் இருந்தார்கள். ஆகையால் கர்த்தர் சொல்லும்போது; ''ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே என்றார்'' (மத்.10:36). பக்தியுள்ளவனுக்கு அவனுடைய குடும்பத்தாரே விரோதியாக மாறுகிறார்கள். இயேசுவை முதலாவது காட்டிக்கொடுத்தவன் பன்னிருவரில் ஒருவனாகிய யூதாசே என காண்கிறோம். தன் குடும்பத்தில் உள்ள ஒரு நபரைப்போல அவர்களோடு பேசிவந்தார். தாம் பிதாவிடம் கேள்விப்பட்ட அனைத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். ஆகையினாலே அவர்களை சிநேகிதர் என்றார். அவருடைய மார்பிலே சாய்ந்துகொண்டு அவருடைய உபதேசங்களைக் கேட்டனர். அப்படியிருந்தும் அவர்களில் ஒருவனே இயேசுவுக்கு துரோகியாக மாறினான். அது எவ்வளவு கொடூரமான செயல்!

இப்படி அவருடைய நாமத்தினிமித்தம் வரும் பாடுகளையும் துன்பங்களையும் மேலும் மற்றவர்கள் நம்மை பகைக்கிறதைக் குறித்தும் நாம் கவலைகொள்ளதேவையில்லை. ஏனென்றால்; ''உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது'' என்கிறார் (லூக்.21:18). அப்படியானால் அவர் எந்த அளவு நம்மில் கரிசனையுள்ளவர் என்று பார்த்தீர்களா. உங்களை உள்ளங்கைகளில் வரைந்துவைத்திருக்கிறேன் என்கிறார் அல்லவா? அவருடைய அனுமதியில்லாமல் ஒன்றும் நடைபெறாது. நம்முடைய தலையில் உள்ள முடிகளை நாம் அறிவோமா, அநுதினமும் குளிக்கிறோம், தலை மயிரை ஒழுங்குபடுத்துகிறோம். ஆனால் எத்தனை முடிகள் நம்முடைய தலையில் இருக்கிறது என்று அறிகிறோமா, ஆனால் கர்த்தர் அறிவார். ஆகையால் தான் அவைகளில் ஒன்றாகிலும் அழியாது என்கிறார். ''நாம் கிறிஸ்துவினுடையவர்கள் கிறிஸ்து தேவனுடையவர்'' என்று 1கொரி.3:23-ல் படிக்கிறோம். கிறிஸ்து அழியாதவர் ஆகையால் நாமும் அழியாமல் இருப்போம்.

இங்கேயில்லை; இதோ, அவரை வைத்த இடம்" மேலும், "...உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?" (லூக்.24: 5) என வேதாகமத்தில் வாசிக்கிறோம். பாடப்புத்தகத்தில் வாசிப்பதை நம்புகிற நீங்கள் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டதை ஏன் நம்பக்கூடாது? பரிசுத்த வேதாகமம் ஒரு பாடபுத்தகத்தை காட்டிலும் மேலானது. அது இறைவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேதபுத்தகம். அதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும், எழுத்தின் உறுப்பும் ஜீவனாயும் ஆவியாயும் இருக்கிறது.

எனவே அன்பு சகோதரியே, நீ யாரானாலும் சரி, 'உனக்கு நிச்சயம் இயேசு தேவை' அவரால்லன்றி ஒருவராலும் உனக்கு மீட்பு கிடைக்காது. வீணாக நித்திய வாழ்வையும் இழந்து விடாதே. உன்னுடைய புத்தக அறிவு உன் ஆவிக்குரிய கண்களை மறைக்காதபடிக்கும், ஆவிக்குரிய அறிவைப் பெறாதபடிக்கும் தடைசெய்யாமலிருக்க ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்களுக்குத் தெரியுமா?
யாரோ ஒருவர் உங்களுக்காக மாத சந்தா செலுத்துகிறார். அதற்காக தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

நீங்கள் வருடந்தோறும் தவறாமல் சந்தா செலுத்துபவரா?
உங்களுடைய பிரயாசத்தின் பலனை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம்!

ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய பதிவு எண் Ref.No-யை எழுதவும்.

நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண்ணையும் தெரியப்படுத்தவும்.

பொது அறிவு சோதனை

1. 'துக்ளக் நாமா' என்ற நூலின் ஆசிரியர் பெயர்?
   அ) அமீர்குஸ்ரு ஆ) பாணப்பட்டர் இ) அல்பரூனி
2. பக்ஸார் போர் எந்த ஆண்டு நடந்தது?
   அ) 1764 ஆ) 1753 இ) 1763
3. தமிழகத்தின் இருண்ட காலப்பகுதியில் ஆட்சி செய்தவர்கள் யார்?
   அ) பல்லவர்கள் ஆ) களப்பிரர்கள் இ) சாளுக்கியர்கள்
4. மணியாடர் மூலம் பணம் அனுப்பும் முறையை ஏற்படுத்திய நாடு எது?
   அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) பிரான்சு
5. எவரெஸ்ட் சிகரத்தை சென்றடைந்த முதல் பெண்மணி யார்?
   அ) விஜயலெட்சுமி ஆ) எஸ்தர் இ) ஜாங்கோ தபேய்

விடைகள்: 1. அ) 2. அ) 3. ஆ) 4. ஆ) 5. இ)

விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அதிசீக்கிரத்தில் இருக்கிறது. "...மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார்"... (வெளி.22:20). ஆனபடியினாலே பிதாவானவர் தாமே நம்மெல்லோரும் தம்முடைய சொந்த பிள்ளைகளாகும்படி "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே.1:6,7). ஆம், சகோதரியே உங்களுடைய ஜீவன் தப்ப வேண்டுமானால் பிதாவையும், இயேசுவையும், அவருடைய ஆவியானவரையும் விசுவாசித்து அவருடைய பிள்ளையாக மாற உங்களை ஒப்புக்கொடுங்கள். இன்னும் கண் கண்டதெல்லாம் தெய்வமென்றும், பல மனிதர்களை தெய்வமாகவும், மனது எண்ணியதெல்லாம் தெய்வமென்றும் கருதி வஞ்சிக்கப்பட்டு போய்விடாதீர்கள்.

புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் இயேசுவினிடத்தில் சுகத்தையும் ஆசீர்வாதங்களையும் பாவமன்னிப்பையும் பெற்றுக்கொண்ட ஸ்திரீகள் அநேகர். அவர்களில் "ஒரு பாவியாகிய ஸ்திரீ இயேசுவின் பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள். ...அதுவும் இயேசுவின் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்து தன் தலைமயிரினால் துடைத்தாள்" (லூக்.7:38-46). இதைக் கண்ட இயேசு அவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே என்று சொல்லி "அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்" (லூக்.7:48). அன்பு சகோதரியே இயேசுவினிடத்தில் அன்புகூருவாயா? அவர் உன் பாவங்களை மன்னிக்க காத்திருக்கிறார்.

இன்னும் அநேக ஸ்திரீகள் இயேசுவுக்கு தங்கள் ஆஸ்திகளால் ஊழியஞ்செய்தார்கள். இவர்களில் சிலர் வியாதிகளினின்று குணமாக்கப்பட்டவர்கள், பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து நீங்கினவர்கள், ஏழு பிசாசுகளின் பிடிகளிலிருந்து நீங்கி சுகமடைந்த மகதலேனாள் மரியாள், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவான்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டு வந்த மற்ற அநேக ஸ்திரீகளும் அவருடன் இருந்தார்கள் (லூக்.8:2,3). இவர்கள் இயேசுவோடுகூட ஊழியஞ்செய்தார்கள் என்று காணும் போது இயேசுவின் மேல் எவ்வளவாய் அன்புகூர்ந்திருப்பார்கள்! காரணம் அவர்கள் பெற்ற சுகம். அவர்கள் இயேசு மரித்து அடக்கம் செய்யப்பட்ட பின்பும் தங்களுடைய அன்பைக் காட்ட சுகந்தவர்க்கமிடும்படி அவருடைய கல்லறைக்குச் சென்றார்கள். பார்த்தீர்களா? இயேசு இவ்வுலகில் தங்களோடு இருக்கும்போது மட்டுமல்ல மரித்தபின்பும் அவருக்குக் கனத்தைச் செலுத்தினார்கள் மாற்கு 16:1-6 வரை இது குறித்து வாசிக்கலாம். அன்பு சகோதரியே, இயேசு மரித்துவிட்டார், பிறகு அவர் உயிர்த்தெழுந்தார் என்ற கூற்றை என்னால் நம்ப முடியவில்லை என்கிறாயா? இப்போது ஜீவிக்கிற நாம் காந்தியடிகள் பற்றியும், நேரு போன்றவர்கள் பற்றியும் பாடப்புத்தகத்தில் படித்து இவர்களெல்லாரும் சுதந்திரத்திற்காகப் பாடுபாட்டார்கள் என்று அவர்களைப் பார்க்கமாலே நம்புகிறோம். இவர்களுடைய சமாதிகள் இன்றும் டில்லியில் உள்ளது வருடந்தோறும் இவர்களை கனம் பண்ணும்படி மாலைகளை போய் வைக்கிறார்கள். ஆனால் இங்கு மாற்கு 16:1-6-ல் படிக்கும்போது "...சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர்

மேலும், ''ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள் விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது'' என்கிறார் (மத்.10:29,30). இவ்வளவு தூரம் நம்மில் கரிசனையுள்ள கர்த்தர் இருக்கும்போது நாம் ஏன் கலங்கவேண்டும். அன்பான தேவ ஜனமே, நீ சோர்ந்துபோகாதே, உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஒருபோதும் கைவிடார். ஆண்டவர் நிமித்தமாக பலபாடுகள் வந்தபோதும், அவர் நம்மோடு இருக்கும்போது நாம் கலங்வேண்டிய அவசியமில்லை. அடைக்கலான் குருவிகளுக்கு இரங்குகிற தேவன் உங்களுக்கு இரக்கம் செய்யமாட்டாரா? உங்களையும் என்னையும் அவருடைய சாயலில் உண்டாக்கியிருக்கிறார். உலகத்தில் உள்ள எல்லாவற்றைப் பார்க்கிலும் அவர் நம்மைத்தான் அதிகம் நேசிக்கிறார். ஆகையால் நமக்கென்று ஒரு பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார் அதை தம்முடைய குமாரனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் அவைகளை நமக்கு சபைகள் மூலம் தெரியப்படுத்திக்கொண்டு வருகிறார். ஆகையால் பிரியமான தேவ ஜனங்களே, நீங்கள் சோர்ந்துபோகாதிருங்கள். ஒருவேளை நீங்கள் நினைக்கலாம் சபைக்காக வாழ்ந்த சகோதரனை இழந்து தவித்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தர் அவரை காப்பாற்றவில்லையே என சொல்லக்கூடும். அப்போஸ்தலர்களை அநேக பாடுகளுக்கு ஒப்புக்கொடுத்த கர்த்தர் அவர்களில் சிலரை மரணத்திற்கும் ஒப்புக்கொடுத்தார். அத்தோடு அவர்களுடைய கதை முடிந்துவிட்டது என்று அர்த்தமல்ல. யூதர்கள் கூட இயேசுவை பிடித்து சிலுவையில் அறைந்துபோடும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். அவரை சிலுவையில் அறைந்தவுடன் அவ்வளவு தான் முடிந்துவிட்டது என்று நினைத்தார்கள். பேதுரு தம்முடைய பிரசங்கத்தில் குறிப்பிடும்போது; ''நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சமாய் அறியக்கடவர்கள் என்றான்''. மேலும், தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை மூன்றாம் நாள் எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது என்று சொல்கிறார். ஆகையால் பிரியமானவர்களே, மாம்ச மரணம் என்பது ஒரு நிரந்தர அழிவல்ல. இயேசுவை எழுப்பின தேவன் நம்மையும் எழுப்புவார். அந்த நம்பிக்கையிலே நிலைத்திருங்கள்.

பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய நிருபத்தில் இதுகுறித்துப்பேசும்போது; ''இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'' என்கிறார் (1கொரி.15:51,52).

இந்தவிதமான நம்பிக்கை உங்களுக்குள் இருக்கிறதா?

ஆகையால் ‘‘உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்’’ (லூக்.21:19). தேவனுடைய மனுஷனுக்கு பொறுமை மிக அவசியம். இன்றைக்கு பொறுமையில்லாமல் அநேக ஆத்துமாக்கள் தங்களுடைய ஓட்டத்தில் தோல்வியை தழுவுகின்றனர். பொறுமையைப் பற்றி பேசச்சொன்னால் மணிக்கணக்காக பேசலாம். ஆனால் பொறுமையாக இருந்து கேட்பது என்பது கூடாத ஒன்றுதான். ஆனால் பொறுமையோடிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ‘‘நீண்ட பொறுமையினால் பிரவுவையும் சம்மதிக்கப்பண்ணலாம்’’ என்று நீதி.25:15-ல் வாசிக்கிறோம். அரசனுடைய சம்மதத்தை பெறவேண்டுமானால் நீடிய பொறுமை அவசியம். அநீதியுள்ள நியாயாதிபதியிடம் ஓயாமல் முறையிட்ட ஒரு விதைவையைப் பற்றி ஆண்டவர் ஒரு உவமையாக கூறியதை லூக்காவின் புத்தகத்தில் படிக்கிறோம். அந்த அநீதியுள்ள நியாயாதிபதி இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் அல்லவா அதைப்போல சோர்ந்துபோகாமல் பொறுமையை இழந்துவிடாமல் இருக்கும்போது நம்முடைய ஆத்துமா காக்கப்படும். சிலர் நாட்டில் நடக்கின்ற காரியங்களைக் கண்டு சோர்ந்துபோய் பொறுமையை இழந்துவிடுவார்கள். லோத்தைக்குறித்து வேதம் சொல்லும்போது; ‘‘நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு, கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்’’ என்கிறார் பேதுரு (2பேது.2:8,9). அநுதினமும் தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டவன் லோத்து. அவனை கர்த்தர் கைவிட்டாரா, அவனை இரட்சித்தாரே, அதைப்போல உங்களையும் இரட்சிப்பார்.

மேலும், யோபை பொறுமைக்கு எடுத்துக்காட்டாக யாக்கோபு சொல்வதை யாக்கோபு 5:11-ல் படிக்கிறோம். ‘‘இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே’’ என்கிறார். ஆகையால் என்ன பாடுகள் பிரச்சனைகள் வந்தாலும் அப்போஸ்தலர்களைப்போலவும், லோத்தைப்போலவும், யோபுவைப்போலவும் நீடிய பொறுமையோடிருந்து உங்களுடைய ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

என்ன பாடுகள் பிரச்சனைகள் வந்தாலும் முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவானா?

பெண்கள் பகுதி

பெண்ணாய் பிறந்தவளே!
O! Ye Who Born As A Women

-J.GloryArjunan

நீங்கள் ‘நான் இந்த பூமியில் பிறந்தது முதல் ஒரு பாவமும் செய்யவில்லை’ என்று கூறமுடியுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள். என்னுடன் பணிபுரியும் ஒரு பெண், நானும் என் கணவரும், என் பிள்ளைகளும் ஒரு பாவமும் இதுவரை செய்யவில்லை என்று சற்றும் சிந்திக்காமல் கூறினாள். நான் அந்தப் பெண்ணை குறித்து மிகவும் பரிதாபப்பட்டேன். "நமக்குள் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம். சத்தியம் நமக்குள் இராது" என 1யோவான் 1:9-ல் வேதம் நமக்குப்போதிக்கிறது.

மேலும், வேதாகமம் "நீதிமான் ஒருவாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை தேவனைத் தேடுகிறவன் இல்லை" (ரோம.2:10,11) மேலும், "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி.." (ரோம3:23) என்று கூறுகிறது. அப்படியிருக்க நாம் நம்மை நாமே நீதிமான் என்றும், பாவஞ்செய்யாதவர்கள் என்றும் கூறி காலத்தை கழித்தோமானால் உண்மையிலே நாம் முடிவில் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாவோம்.

இப்படியிருக்க நம்மேல் இரக்கம் கொண்டு, தம்முடைய இரத்தத்தைச் சிந்தி, நம்மை பாவமற கழுவி நீதிமானாக்கியிருக்கிறார் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து. ஆனால் "உலகமோ அவரை அறியவில்லை" (யோவா.1:10). இதை வாசிக்கிற அன்பு சகோதரியே நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்களா? அல்லது அந்த இயேசு கிறிஸ்து எங்களுக்குத் தேவையில்லை என்று அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டீர்காளா? எது எப்படியிருப்பினும் நான் உங்களை அன்பாய் கேட்டுக்கொள்வது "இயேசுகிறிஸ்து உங்களுக்கு நிச்சயமாக தேவை"என்பதே. ஏனென்றால், "...இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று யோவான் 14:1-ல் கூறியுள்ளார். நாம் பிதா வாசமாயிருக்கும் பரலோகத்திற்குச் செல்லவேண்டுமானால் அதற்கு இயேசுவே வழி, சத்தியம், ஜீவனுமாயிருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். காலம் செல்லாது. இது கடைசி காலம். உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளாதீர்கள். இது ஒரு மதமாற்ற செய்தியல்ல, உண்மை மார்க்கப்போதனையாக இருக்கிறது.

அநேகர், ஏதோ ‘ஒரு சக்தி’ உள்ளது, அதை நம்பி நான் அந்த சக்தியை வணங்குகிறேன் என அடம்பிடிக்கின்றனர். தற்போது ‘யோகா’ பயிற்சியில் எனக்கு அமைதி கிடைக்கிறது என்கின்றனர். வேதாகமம், "சரீர முயற்சி அற்பபிரயோஜமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1தீமோ.4:8) என்று கூறுகிறது.

பிதாவானவர் நம்மேல் அளவுக்கதிகமான அன்பு வைத்துள்ளார். இந்த பூமியிலிருக்கிற "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று

இயேசு, ஜீவனுக்கு நேராய் வழி நடத்துகிற ஒரே ஒரு வழியையும், அவரே அந்த வழி என்றும் கூறினார். அந்த மார்க்கத்தைப் பின்பற்றின ஆதிக்கிறிஸ்தவர்கள் பிரபலமாயிருக்கவில்லை; அவர்கள் பிரசங்கித்த கோட்பாடும் பிரபலமாயிருக்கவில்லை; அவர்கள் கர்த்தர் போதித்தவற்றை பிரசங்கித்ததினால் அவர்கள் வெறுக்கவும், துன்புறுத்தவும் பட்டார்கள்; பல வழிகள் இல்லை; ஏற்றுக்கொள்ளப்படதக்க மதங்கள் இல்லை; பல சபைகள் இல்லை; இரட்சிக்கப்படுவதற்குப் பல வழிகள் இல்லை; தேவனை ஆராதிப்பதற்குப் பல வழிகள் இல்லை. இயேசு போதித்தார் மேலும் கிறிஸ்தவர்கள் போதித்தார்கள் ‘‘ஒரே ஒரு வழியை’’.

இயேசு கூறினார்: ‘‘நான் என் சபையைக் கட்டுவேன்... என்று (மத்.16:18). பவுல் எழுதினார், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் மூலம் ‘‘...கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்’’ (எபே.5:25-27).

இயேசு, தம்முடைய ஜனமாகிய, தம்முடைய ராஜ்யமாகிய, தம்முடைய மணவாட்டியாகிய தம்முடைய சபைக்குத் திரும்பவும் வருவதாக வாக்களித்தார் (வெளி.22:12, யோவா.14:3, மத்.25:31-46). நீங்களும் நானும் ‘‘அந்த மார்க்கத்தில் இருப்போமா?’’

நடப்புச் செய்திகள்

- கோடைகால பயணிகள் நெரிசலை சமாளிக்க, மேட்டுப்பாளையம் - குன்னூர் இடையே கோடைகால சிறப்பு ரயில்களை, தென்னகரயில்வே அறிவித்துள்ளது.
- 586 கோடி ரூபாய் மதிப்பிலான 22 அன்னிய முதலீடுகளுக்கு மத்திய அரசு அனுமதி.
- சூடான் நாட்டில், 20 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டு சண்டையில் 15 லட்சம்பேர் பலியாயினர். தற்போது சர்ச்சைக்குரிய எண்ணெய் வளப்பகுதியிலிருந்து படைகளை வாபஸ் பெற்றது.
- ராமநாதபுரம் மாவட்டத்தில் மின்வெட்டால் உப்பு உற்பத்தி 40 சதவீதமாக குறைந்துவிட்டது.

இலங்கை ஆசியசேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை இலங்கை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இலங்கை வானொலி இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள். எமது www.thewordofchristindia.com என்ற இணையதளத்தில் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்" மாத இதழ் மற்றும் வானொலி, தொலைக்காட்சி அனைத்து ஊழியங்களையும் உலகளவில் 24-ங்கு மணிநேரமும் பார்த்து மகிழுங்கள்.

ஆம், கொஞ்காலம் தோன்றி பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போல நம்முடைய விசுவாசம் இருக்கக்கூடாது. கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டவர்களாக காணப்படவேண்டும். பெருவெள்ளம் வந்தும் காற்றுஅடித்தும் அதை அசைக்கக்கூடாமற்போயிற்று ஏனெனில் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம்போடப்பட்டிருந்து. அதைப்போல உங்களுடைய விசுவாசத்தை கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது வைத்து அவர் மீது நம்பிக்கையாயிருங்கள். ‘‘என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்’’ என்று நம்முடைய ஆண்டவர் சொல்லியிருக்கிறார் (மத்.10:22). கொஞ்ச காலம் தோன்றி பின்பு காணாமற்போகிற புகையைப்போலத்தான் அநேகருடைய வாழ்க்கையானது இருக்கிறது. அவ்விதமாக இல்லாது நீடித்து நிலைத்திருங்கள். கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள். தேவன் உங்களை பொறுமைக்கு நேரே வழிநடத்தும்படியாக நாங்கள் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம்.

வேத அறிவுப்போட்டி எண் 140-ன் விடைகள்

1.பிரியமுண்டாக	- தீத்.2:12
2. ரெகொபெயாம்	- 2நாளா.11:17
3. பவுல்	- பிலே.14
4. அர்தசஷ்டா	- எஸ்றா7:25
5. ஆபிரகாம்	- எபி.11:10
6. அர்தசஷ்டா	- நெகே.11:23
7. பூரணபுருஷனும்	- யாக்.3:2
8. அகாஸ்வேரு	- எஸ்தர் 8:16
9. தூஷிக்கிறார்கள்	- 1பேது.4:4
10. யோபு	- யோபு 19:17

வேத அறிவுப்போட்டி எண் 140-ல் வெற்றிபெற்றவர்கள்

1. K.கலாவதிராஜா	- கோபாலபுரம்
2. Mrs.ஜெபசீலி	- திருச்சி
3. N.ஜான் செல்லையா	- மதுரை
4. M.சத்தியா	- கோபாலபுரம்
5. Mrs.மரகதம் திரவியம்	- கோம்பை
6. A.ரெபேக்காள்	- மதுரை
7. S.தேவகிருபை	- கொடைக்கானல்
8. A.வளர்மதி ஏஞ்சல்	- நாசரேத்
9. Sis.பாவு சவுந்தரி	- ஆம்பூர்
10. Sis.ஜாய் வாசுகி	- கோவை
11. எஸ்றா	- ஆடலூர்
12. T.ராஜாத்தி	- கோம்பை

கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது – சங்.12:6

வேதஅறிவுப்போட்டியாளர் கவனத்திற்கு உங்களுடைய விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பி ரூ2-யை மிச்சப்படுத்தி அதை ஊழியத்திற்கு உதவிடலாமே!

ஜெபியுங்கள்

- இம்மாதம் நடைபெறும் அனைத்து V.B.S கூட்டங்களுக்காக...
- நம் சகோதரர்கள் நடத்தும் விசேஷ கூட்டங்களுக்காக...
- இம்மாத ஊழியங்களுக்காக...
- மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் நேயாளிகளுக்காக...
- சிறைச்சாலை கைதிகளுக்காக...
- ஜெபிக்கக் கேட்டுக்கொண்ட அனைத்து வானொலி தொலைக்காட்சி நேயர்களுக்காக...

பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

Putting Off The Old Man of Sin

பாடம் -9 தற்கொலை - Suicide

J.C.Choate

உங்களுக்கு நன்றியையும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு வேதாகம வகுப்பிற்கு நான் மீண்டும் வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் அறிந்துள்ளபடி, பழைய பாவ மனிதனை களைந்து போட்டு கிறிஸ்து இயேசுவுக்குள்ளான நீதிக்குரிய புதிய மனிதனை அணிந்து கொள்ளுவதின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கு உதவியாக இதுவரை சில பாடங்களைப் படித்திருக்கிறோம். இதற்கு ஒப்புமையாக இருளான அறையை விட்டு வெளிச்சம் நிறைந்த அறைக்குள் வருவது போலவும், அல்லது அவிசுவாசியாக இருந்த நிலையை விட்டு பிறகு கிறிஸ்துவுக்குள் விசுவாசியாக மாறியிருப்பதாகும்.

நாம் இந்தப் பாடங்களை தொடர்ந்து படிக்க இப்போது தற்கொலை பற்றி படிக்கப் போகின்றோம். தற்கொலை சாதாரணமாக தற்கொலை அல்லது எங்கே ஒருவன் தன்னை தானே கொலை செய்துகொள்வதாகும். இது தேவனுக்கு விரோதமான ஒரு பாவம், மேலும் தனக்கும், தன் குடும்பத்திற்கும் விரோதமான ஒரு பாவம் மற்றும் இது பல நாடுகளில் சட்டங்களுக்கு எதிரான ஒரு பாவமாகும்.

தற்கொலை என்பது ஒரு புதிய காரியமல்ல. இது ஆரம்ப காலத்திலிருந்தே நடைபெற்றுக் கொண்டிருந்தது, பழைய ஏற்பாட்டுக் காலத்திற்குத் திரும்பி எப்படி இஸ்ரவேலின் முதல் அரசனான சவுல் தற்கொலை செய்துகொண்டான் என்பதை நினைத்துப் பார்ப்போம். இவன் தேவனுடைய ஜனங்களை ஆளும்படிக்கு தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன், ஆனால் தன் வாழ்நாட்களை எதிரிகளுடன் போர்களில் சண்டையிடுகிறவனாகக் கழித்தான். 1சாமுவேல் 31:1-6-ஐ வாசிப்போம்; "பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள்; இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூகாவையும் வெட்டிப்போட்டார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக் கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு, தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி,

வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்" (மத்.7:13,14).

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

- எத்தனை சத்தியங்கள் உள்ளன? ஒன்று
- எத்தனை இரட்சகர்கள் உள்ளனர்? ஒன்று
- எத்தனை வாசல்கள் உள்ளன? ஒன்று
- எத்தனை மேய்ப்பர்கள் உள்ளனர்? ஒன்று
- எத்தனை மந்தைகள் உள்ளன? ஒன்று
- எத்தனை வழிகள் ஜீவனுக்கென்று உள்ளன? ஒன்று

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

புதிய ஏற்பாட்டில் ஒரு சபை அல்லது ஜனக்கூட்டம் விசாலமானதும் குறுகலானதுமான வழியாக அடையாளப்படுத்தப்படுகிறது. என்னோடு வாசியுங்கள்.

- சவுல் அதிகாரமுள்ளவர்களின் நிருபத்தைக் கேட்டு வாங்கினான். "இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி..." (அப்.9:2)

எனவே, துன்புறுத்தப்பட்டவர்களாயிருந்த இந்த மார்க்கத்தார், நிருபத்தில் எழுதப்பட்டவர்களாகவும், அடையாளங்காணக்கூடியவர்களாவும் இருந்தார்கள்.

- "அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்த பெரிய கலகம் உண்டாயிற்று" (அப்.19:23). எபேசுவில் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணை பண்ணி, புத்திசொல்லிக்கொண்டு வந்தபோது சிலர் பவுலுக்கு செவி கொடுத்தார்கள், ஆனால் சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகி, அவர்கள் "... கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தார்கள்" (அப்.19:8,9).

எனவே, ஜனங்கள் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்து அவர்கள் பிரசங்கித்ததை புறக்கணித்து, அந்த மார்க்கத்தை நிந்தித்தார்கள். நீண்ட நாட்களாக வர காத்திருந்த ராஜ்யம் அந்த மார்க்கமாகிய, சபையாக இருந்தது.

- பவுல், "உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து..." (அப்.24:14) என்றான்.

எனவே, பவுல் இந்த மார்க்கத்தின் தனிப்பட்ட விதத்திலும், அடையாளங்காணத்தக்கவிதத்திலும் தேவனை ஆராதித்த மக்கள் சபையின் ஒரு அங்கமாக இருந்தான்.

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வாழ்வின் முடிவில் நமது ஆவிக்குரிய வாழ்வைக் கண்டு கொண்டோமா அல்லது மரணத்தைக் கண்டு கொண்டோமா எனத் தீர்மானிக்கும்.

நாம் தேவர்களையும், பழங்கால மதச்சடங்காசாரங்களையும் பின்பற்றலாமா? நாம் மத அனுசரணை முறையையும், தியானத்தால் உண்மையையும், பரம்பொருளையும் காணலாம் என்ற கொள்கையையும் தெரிந்து கொள்ளுகிறோமா? பெரும்பான்மையோருடைய பாதை நம்மை கவர்ந்திருக்கிறதா? நம்முடைய பெற்றோர்களின் தெரிந்தெடுத்தல் நம்முடையதாக இருக்கின்றதா? மனிதரால் ஆரம்பிக்கப்பட்ட மதங்களை நாம் பின்பற்றுகிறோமா? நம்மருகிலுள்ள பிரிவினை சபை நம்மை திருப்திப்படுத்துகிறதா? எந்த ஒரு சமயக்கோட்பாடுமின்றி நம்முடைய சுயநன்மைகளில் நாம் போதுமான அளவு நல்லவர்களாக இருக்கிறோம் என நாம் தீர்மானிக்கிறோமா?
இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வேதாகமம் கூறுகிறது: ''மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்'' (நீதி.14:12).

''கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடத்துகிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்'' (எரே.10:23).

இயேசு கூறினார்: ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவா.14:6).

அவர் மேலும் விளக்கினார், ''நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்...'' (யோவா.10:9).

இயேசு எதற்கு வாசலாக இருக்கிறார்? அவர் பதிலளிக்கிறார்: ''நானே ஆடுகளுக்கு வாசல்... நானே நல்ல மேய்ப்பன் பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்'' (யோவா.10:7,14-16).

மனிதர் பல வழிகள் உண்டென்றும், அவைகள் தாங்கள் விரும்பியவற்றை தெரிந்தெடுக்க எளிதாக இருக்கின்றது என்றும் தங்களுக்குள்ளாக சொல்லக்கூடும். ஆனால் தேவனுடைய குமாரனும் நமது இரட்சகருமாயிருக்கிற இயேசு இரண்டு வழிகள் மட்டுமே உண்டென்று கூறுகிறார். மனிதர் ஏற்படுத்தியிருக்கிற நூற்றுக்கணக்கானவைகள் அல்லது ஆயிரக்கணக் கானவைகள் அல்ல இரண்டு மட்டுமே. அவைகள்...

''இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற

என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான். சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது, அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து, அவனோடே கூடச் செத்துப்போனான். அப்படியே அன்றையதினம் சவுலும், அவன் மூன்று குமாரரும், அவன் ஆயுததாரியும், அவனுடைய எல்லா மனுஷரும் ஒருமிக்கச் செத்துப்போனார்கள்".

இன்னோரு புகழ்பெற்ற எடுத்துக்காட்டு யூதாஸ் ஸ்காரியோத்தின் தற்கொலை ஆகும். யூதாஸ் கிறிஸ்துவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாயிருந்தான். அவன் கர்த்தரோடே நடந்தான், அவருடைய போதனைகளைக் கேட்டான். அவருடைய அற்புதங்களைக் கண்டான் ஆனால் முடிவில் தன்னுடைய தலைவரையே முப்பது வெள்ளிக்காசுக்காகக் காட்டிக் கொடுத்தான். அவன் ஏன் இதைச் செய்தான் என யார் அறிவார்? இவை பல முறை முன்னறிவிக்கப்பட்டவைகள். ஒருவேளை ரோம அரசாங்கத்திற்கு எதிராக செயல்படும்படி கிறிஸ்துவை வற்புறுத்த முயற்சித்து கொண்டிருக்கலாம், ஆனால் நாம் அதை அறியோம். அவனுக்குப் பணம் தேவைப்பட்டிருந்தால் நிச்சயமாக முப்பது வெள்ளிக்காசு மிக அதிகமான தொகையல்ல. "அப்பொழுது, அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக்கொண்டுவந்து; குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான். பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்து இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப்போடலாகாதென்று சொல்லி, ஆலோசனைபண்ணினபின்பு, அந்நியரை அடக்கம்பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தை அதினாலே கொண்டார்கள். இதினிமித்தம் அந்த நிலம் இந்நாள்வரைக்கும் இரத்தநிலம் என்னப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று" (மத்.27:3-10) என வாசிக்கிறோம். பின்பு அப்போஸ்தலர் 1-ல் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் கூடி யூதாஸுக்குப் பதிலாக இன்னொருவனைத் தெரிந்து கொள்ளுகையில், பேதுரு, "சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்குபெற்றவனாயிருந்தான். அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய

பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது. சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது" என்று விளக்கினார்.

ஆனால் ஏன் இந்த மனிதர்கள், மேலும் மற்றவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்? அது மாத்திரமல்ல, ஆனால் இன்று ஏன் ஜனங்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர்? மேலும் நம் சொந்த நாட்களில் அநேகர் இவ்விதமான துக்ககரமான செயலை செய்கிறார்கள் என நான் அதிகப்படியாகக் கூற கூடும். அவர்களில் அதிக சதவீதத்தினர் இளைஞர்கள். ஆனால் ஏன்?

நிச்சயமாக தற்கொலைக்கு பல காரணங்கள் உள்ளன. ஆனால் ஒன்று கூட நியாயமானவையல்ல. எடுத்துக்காட்டாக, தற்கொலை செய்து கொள்ளுகிறவர்கள் பயத்தினால் செய்து கொள்கிறார்கள். சவுல் தன் எதிரி தன்னைப் பிடித்துவிடுவான், தன்னை துன்புறுத்துவான், தன்னை தகாதவிதமாக நடத்துவான் என்று பயந்தான். இதையெல்லாம் பார்க்கையில், இதிலிருந்து தப்ப மரணம் ஒன்றே வழியாகயிருந்தது. அதைப்போலவே யூதாஸ்ஸிம் தான் நினைத்தப்படி காரியங்களும், ஒன்றும் ரோம அரசாங்கத்தால் நடைபெறவில்லை என அவன் கண்டபோது வெளிப்படையாகவே தான் எதைச் செய்தானோ அதற்காக வருந்தினான். அவன் தானே தன்மேல் அவமானத்தைக் கொண்டுவந்ததைக்குறித்தும் தனக்கு எதிர்காலத்தில் என்ன நம்பிக்கை உள்ளது என்றும் நினைத்து பயந்தான். தெளிவாக சிந்தித்துப்பார்க்காமலிருந்திருக்கலாம், பின்பு அவன் வெளியே சென்று தன்னை தானே தூக்கிலிட்டுக் கொண்டான். அப்போஸ்தர் 16-ல் பவுலும் சீலாவும் சிறைச் சாலையிலிருந்து கொண்டு அதன்பின் அவர்கள் அற்புதமாக விடுவிக்கப்பட்டார்கள் என வாசிக்கிறோம். சிறைச்சாலைக்காரன் வந்து பார்த்தபோது அவர்கள் ஓடிப்போனார்கள் என எண்ணி தன் பட்டயத்தை உருவித்தன்னைக் கொலை செய்து கொள்ளப்போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு; "நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்" (அப்.16:28). சிறைச்சாலைக்காரன் அவர்களைக் காக்கும் பொறுப்புடையவனாகவும் அவர்களைக் காவல் காக்கிறதோடேகூட தன் ஜீவனைக் காப்பவனாகவுமிருந்தான் அவர் தப்பித்துவிட்டார்களென்றால் அவன் தூக்கிலிடப்படுவான் என அவன் அறிவான். அவன் அவமதிக்கப்படுவதையும் தாழ்த்தப்படுவதையும் காட்டிலும் தன் சொந்த ஜீவனை விட்டுவிடுவதே நல்லது என்று பயந்தான் நிச்சயமாக அவன் வழக்கத்திற்கு மறான ஆபூர்வமான கைதிகளைக் காக்க வேண்டியவனா யிருந்தான். அவர்கள் சிறைச்சாலைக்காரன் தற்கொலை செய்வதை விரும்பவில்லை, ஆனால் அவர்கள் அவன் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டுமென விரும்பினார்கள். ஆனபடியினால் அவர்கள் அவனுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் போதித்தார்கள், அதன் விளைவு அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்களாக மாறினார்கள். இந்த சம்பவம் ஒரு நல்ல முடிவினை அடைந்தது என்பது ஒரு நேரம்.

-தொடர்ச்சி அடுத்தஇதழில்

பெண்கள் பகுதி

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

Have You Thougt About This?

-Betty

ஜனங்கள், நம்முடைய அடிப்படை நோக்கம் கிறிஸ்துவாகவும், அவர் நமக்கென்று உருவாக்கின பெரிய தியாகமாகவும் இருக்கவேண்டும் எனக்கூறிக் கொண்டு சபையை மட்டுப்படுத்து கின்றனர்.

ஆனால், உண்மையில் தேவனுடைய முக்கிய நோக்கம் சபையே! வரலாற்றின் தொடர் ஓட்டத்தில், அவருடைய இலக்கு கிறிஸ்துவினுடைய மரணம் அல்ல ஆனால் அந்த மரணம் நிறைவேற்றிய மனிதருடைய ஆத்துமாக்களை தம்மிடத்திற்கு மீட்டுக் கொண்டதேயாம். சபையைப் பற்றிய விளக்கம் இது: மாம்ச சரீரம் தேவனிடத்திற்கு மீட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கிறிஸ்து தாமே சபையை போஷித்தார். அவருடைய மரணமே ஆயுதம். தேவன் நாடிய இலக்கு!

இல்லை, ஜீவனைக் கொடுக்கும்படி மரித்த ஒருவரை நாம் மட்டுப்படுத்தக்கூடாது. ஆனால் நாம் தேவனுக்கும் தமக்கென்று சபையை சம்பாதிக்கும்படிக்கு மேலான தியாகத்தைச் செய்த கர்த்தருக்கும் அதிக விலையேறபெற்ற கிரயத்தை மட்டுப்படுத்திய அந்த குற்ற உணர்வுடையவர்களாய் இல்லாமல் இருப்போமாக!

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வாழ்ந்து கொண்டிருக்கிற ஒவ்வொரு மனிதனும் ஒரு வழியில் பயணம் செய்கின்றனர். சரீரப்பிரகாரமாக, நாம் ஜீவனிலிருந்து மரணத்துக்குப் பயணம் செய்கிறோம்.

நாம் பயணம் செய்கின்ற வழி ஒருவேளை ஆவிக்குரிய வாழ்விற்கு வழிநடத்தும் அல்லது ஆவிக்குரிய மரணத்திற்கு வழிநடத்தும், ஆனால் நாம் எல்லாரும் சேரவேண்டிய ஒரு இடத்தை அல்லது மறுமையை நோக்கிச் செல்லுகின்றோம் என்பது ஓர் தப்பித்துக்கொள்ள முடியாத உண்மை ஆகும்.

நாம் எந்த எல்லையைப் போய் சேருவோம்? நீங்கள் இதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

ஜனங்கள், அநேகமாக அனைவரும் நாம் ஆயிரக்கணக்கான வழிகளில் பயணம் செய்வோம் என தீர்மானிக்கின்றனர். அவர்கள் தெரிந்தெடுத்தல் எந்த வித்தியாசத்தை ஏற்படுத்துகிறதில்லை என நினைக்கின்றனர். ஆனால் அவை வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. உண்மையிலேயே நமது தெரிந்தெடுத்தலானது